838

No. M. 1288.

ஓம் பரப்பிரமணே நம:

சர்வசமய சமரஸ சன்மார்க்க சதாசாரம்

சமரஸம்

ஓர் சிறந்த தமிழ் மாதாந்த பிரசுரம்.

சாது குழவி } அக்ஷயஹூ கார்த்திகைமீ மார்கழிமீ 12உ 1உ 1927ஹூ { வயது மீ 6

அகக்கண்ணாடி.

1. வாய்மை.
2. திருக்குறள் விளக்கம்.
3. சமூகஞானம்.
   (a) தர்மம்.
   (b) ஜீவகாருண்யமில்லாதவன்.
4. சமய ஞானம்.
   (a) ஆரோக்கியமும் நித்திய அநுஷ்டானமும்.
   (b) கைத்தொழில்.
   (c) ஸ்ரீகாந்தியடிகள் சரிதம்.
5. அரசியல் ஞானம்.
   (a) கிராம தபால்.
   (b) வியாபார சட்டம்.
   (c) வர்த்தமானம்.

OFFICE OF THE REGISTRAR OF ... No. 10 AUG 1927 MADRAS

வருட சந்தா { உள் நாடுகளுக்கு ரூ. 1—0—0
வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0

Edited & Published by :—
M. A. Varadaraja Mudaliar.

S. R. V. Press, Villupuram.

ஓம் பரப்பிரமணே நம:

மிகப் புதியது. | **சமரஸம்.** | எனினும் பழையது.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு—குறள்

சாது குழவி } 1926௵ நவம்பர்—டிசம்பர் அட்சய௵ கார்த்திகை௴ மார்கழி௴ { வயது 1 ௴ 6, 7.

பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்.

உண்மை.

உண்மையை எதிர் முகத்தான் கூறு மிடத்து பொய் பேசுதலால் மக்கள் எவ்வளவு இழிவுள்ளவர்களாக காணப்படுகின்றனர் யென்பது இனிது விளங்கும். நடந்த விஷயங்களைச் சொல்லுதவில் பிறர்க்கு தீங்கு நேரிடாத வண்ணம் மறுத்து கூறுதலும், நடவாத விஷயங்களை சிலநன்மைகளின் பொருட்டு நடந்ததாக சொல்லுதலும், ஆபத்துக்காக பொய் சொல்லுதலும், பரிகாசத்திற்காக பொய் சொல்லுதலும், குற்றமற்றவை யென்பது சில நூற்றுணிபு.

எப்பொழுதும், பிராணன்போகும் சமயத்திலும், பொய்யுரைக்கலாகாதென்பதை தங்கள் இனிய நடக்கையாலே யொழுகிக்காட்டியுள்ள மகாத்மாக்கள் அரிச்சந்திரன், பலி, இயேசு காந்தி, ராமர் முதலியோர் இவர்கள் உபதேசம் கனவிலும் பொய் சொல்லலாகாதென்பதே. இன்பம் வரினும் துன்பம் வரினும், பொய் சொல்லல் பழக்கதோஷமேயன்றிவேறல்ல. பொய்சொல்லாதபடிக்கு பிள்ளைகளை பழக்குதலே தாய் தந்தயர் பிள்ளைகட்கு செய்யவேண்டிய முதல் கடமை.

எப்பொழுதும் பிள்ளைகளை உண்மை சொல்லப் பழக்குதல் மேல்நாட்டாருடைய முக்கிய குணங்களிலொன்று. "இளமைப் பழக்கம் சுடுகாடுமட்டும்" யென்பது பெரியோர்கள் வாக்கல்லவா? தாய்தந்தையர் தங்களுக்கு பிள்ளைப்பேறு வேண்டுமென்று கோரினால் மக்களை உண்மை முறையில் நடத்தி பழக்குவதற்கு யோக்கியதையின்மையேல் என்பயனுடையது.

மக்கள் பேருள்ள தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளை பழக்க பிரதிதினம் 4 மணி நேரம் சிந்தை செலுத்தல் வேண்டும்.

தெய்வப்புலவர் குறள் விளக்கம்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

(பத-உரை) எப்பொருள்-யாதொரு பொருளை, யார் யார் வாய்-எவரெவர்வாயில் கேட்பினும்—கேட்டாலும், அப்பொருள் அப்பொருளினது, மெய்ப்பொருள்-மெய்யாகிய பயனை, காண்பது—காணவல்லது, அறிவு-விவேகம் (கருத்து) எந்த பொருளை எவரெவர் வாயிற்கேட்பினும் அந்த பொருளை காண்பதே யறிவாகும் மென்பதாம்.

(வி-உரை) முக்குணங்களும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்டாதலால், உயர்ந்த பொருளை இழிந்தார்வாயிலும், இழிவாகிய பொருளை உயர்ந்தார் வாயிலும், உறுதிப்பொருளை பகைவர் வாயிலும் கெடுபொருளைச் சினேகர்வாயிலும், ஒரேவிடத்தே கேட்கப்படுதலால் எப்பொருள் யார் யார் வாய் கேட்பினுமென்றார். அதாவது சொல்லுவாரது உயர்வு, தாழ்வு, சிநேகம், பகைமை, உறவு, ஜாதிமுதலியவைகளை கவனியாமல் அவரவர்கள் சொல்லின் பயநோக்கி, அன்னம் ஜலத்தை வேறுபடுத்தி பாலை உட்கொள்ளுமாறு போல், நல்லவிஷயங்களை ஏற்றுக்கொண்டு, தீய விஷயங்களை விட்டுவிடுவது அறிவாளிகள் உத்தம செய்கையாகும். பகைவர் உண்மையும், அன்பும், உறுதியுமான வார்த்தைகளை முதலில் சொல்லி பிறகு தீய விஷயங்களில் மடுப்பாரென்பதும், (உறவினர்) கல்வியும் புத்தி விசாலமுமில்லாத-நீதிச் சொற்களும், கீழ் ஜாதியார் மேலான விஷயங்களைச் சொன்னபொழுது உருவு கண்டு எண்ணி நகையாடலும், நமது சிநேகர் நாம் செய்யும் காரியத்தினல் உண்டாகும் ஆபத்தை யெடுத்துக்காட்டி கண்டிக்கும் பொழுதும், பகற் கள்வர்கள் மிகவும் இச்சையான வார்த்தைகளைக் கொண்டு காது குளிர பேசுகையிலும், சமயத்தலைவர்களும், சமூகத்தலைவர்களும், அரசியல் தலைவர்களும், நன்மை உண்டாகக்கூடிய பல காரியங்களில், பல உபதேசங்ள், மொழிந்த பின்னர் உலகத்து இயல்புக்கடுக்காத பல சுயநலமான விஷயங்களையும், கொள்கைகளையும் அனுஷ்டிக்கும்போது, அவரவர்களின் பேச்சுகளின் அளவுகளைத்தெரிந்து அதன்படி நடத்தலும், தீமையாய் இருக்குமாயின் விலகலும், உலகத்து அறிவுள்ள மக்களின் நடக்கையாம். (க-ரை) அறிவாளிகள் ஒருவர் பேச்சுகளை அளவிவிட்டு பார்ப்பர்

சமூக ஞானம்.

எல்லார்க்கும் பரமசிவன் துணையாமாகில்—எவ்வுயிர்க்கும்
அவனருள் சேர்ந்திருக்குமன்றோ
பொல்லார்க்கும் அறிவுகெட புரிந்திடாமல்—பொறிவழியே
மனம்பொருந்தி சுழன்றிடாமல்
நல்லோர்க்கும் பெரியோர்க்கும் எளியோர்க்கும்—நாடோறும்
இறக்கமுண்டாய் நடப்பாயாகில்
பல்லோர்க்கும் உயிர்க்குயிராய் நிறையுமெங்கோன்—பரிவினொடு
கருணையருள் பாலிப்பானே.

தருமம்.

சிருஷ்டி—கடவுளால் அமைக்கப்பட்ட அண்டங்களிலும் அதிலுள்ள ஒவ்வொரு பதார்த்தங்கள் சத்தியமுள்ள நிலை தவராத சிருஷ்டியின் இயற்கை தர்மத்தை சதாபுரிந்து கொண்டேயிருக்கின்றன. விவரிக்கப்புகின்விரியுமென்றஞ்சி விடுத்து மேல்செல்வாம்.

உயிர்கள்— உலகத்து உயிர்களெல்லாம் தர்மத்தின் மிகுதி குறைவால் ஜன்மங்களெடுத்து பிறக்கின்றன. தர்மத்தின் பெருக்கால் உயரிய ஜன்மமும், குறைவால் தாழ்ந்த ஜன்மங்களும் லபிக்கின்றனவென்பது இந்து தத்துவ ஆராய்ச்சியின் உண்மை. செல்வம் கீர்த்தி, அழகு, உன்னதபதவி முதலிய பலவளங்களும் அறத்தின் விசேடத்தாலன்றோ! ஜீவர்கள் சிறப்புறுகின்றனர்.

மத தர்மம்—இப்பிரபஞ்சத்திலுள்ள மனிதர்களெல்லாம் தருமத்தை யாற்றுவதற்கு பலவழிகள் சொப்பனிட்டுள்ளார்கள். அவற்றுள் மிக்க புராதனமானதும், உத்தமமுமானது இந்து சநாதன தர்மங்களே. இந்துக்கள் மிகப்பழமையானவர்களாகையால் பண்டைகாலந்தொட்டு ஞானத்தின் சிகரத்தை யடைந்திருக்கின்றனர். பாருங்கள்! நாகரீகத்திற் முற்பட்ட நமது மூதறிஞர் தர்மத்தைவளர்க்க செப்பஞ் செய்துள்ள விதிகள் மிகவும் சுலபமானதும் வியக்கத்தக்கவைகளாயு மிருக்கின்றன அவர்கள் தர்மதேவதையின் அம்ஸங்களாய் தோன்றி அரிய காரியங்களை நிகழ்த்தி, தர்மாத்மாக்களுக்கு உதாரணமாக ஒழுகிக்காட்டியுள்ளார்கள். இந்து தர்மத்தின் அம்ஸங்கள் சமரஸ பாவமுள்ளது

இந்து தர்மத்தின் மூலக்கொள்கைகள். எல்லா வுயிர்களையும் பரமாத்மாவின் அம்ஸமென நினைத்து அதனிடத்தில் கருணை புரிதல். பயங்கரமான பஞ்சபூத சேஷ்டைகளினின்றும் துஷ்ட ஜந்துக்களினின்றும், தங்களை காப்பாற்றும் பொருட்டு அவைகளை ஸ்மரித்தல். இந்துக்களின் தர்மசாஸ்திரங்கள் பலவகைப்பட்டவைகள். அவை முறையே சமயம், சமூகம், அரசியல்யென மூப்பகுதியாளர்க்கு உரிமைப்படி பிரித்து கூறினாலல்லது பொருள் மின்னுக்கு பின்முறணாகவே நிற்கும்.

அறிவாளிகள் தர்மத்தை சமயம், சமூகம், அரசியல் என மூவ்வழியில் இயங்குமாறுபாகுபடுத்தியுள்ளார்கள். ஒவ்வொரு குடும்பமும் நல்வாழ்வு பெற்று தங்கள் கீழ்வர்க்க விர்த்திகளை தங்கள் குலக்குரிமையினராய் வளர்த்தல். அமைதலும், அஹிம்சையுமான எல்லா முறையிலும் ஒழுகல், ஆண்டவனை பணிதல், முதியோரால் இயற்றப்பட்ட அல்லது காலத்துக்கேற்றவாறு இயற்றும் நிர்மாணங்களை சிரமேற்கொண்டொழுகல், முதலியன சமய வாழ்வு பெற்றுணர்க்குரிய பிரமாணங்களாம். சமூகவாழ்வில் தலைப்படும் ஒவ்வொருவரும் சமயவாழ்வின் தர்மத்தை நன்குணர்ந்து அதன்படி யொழுகி பரிபக்குவமடைந்த பன்னாட்களுக்கு பின்னரே சமூக வாழ்வில் ஈடுபடல் வேண்டும். தாம் கற்றுத்தேர்ந்த பின்னர் சுருதி, யுக்தி அனுபவத்தை பொதுஜனங்களுக்கு எடுத்துகாட்டலும், தானே அவ்வாறு ஒழுகிக்காட்டலும், மனித சமூகத்தோடு சமரஸ நோக்கத்துடன் ஒருப்பட்டு பன்னூற்களின் அகப்பொருள், புறப்பொருள்களை புணர்ந்து நிலைவழிப்படலும், கடவுள்வழி சேர்தலுமே சமூகர்தவர்களின் கடமையாகும்.

சமூகவாழ்வின் தர்மங்களை மூதுணர்ந்து பழக்கம் பெற்ற பின்னரே தீவிர புத்தியுள்ளவர்கள் அதாவது க்ஷத்திரியகுணமமைந்தவர்கள் அரசியல் தர்மத்தை நடாத்துதற்கு முற்படல்வேண்டும். நடுநிலைமை வகித்து இருவகைப்பட்டாரின் பிணக்குகளை சமாதானப்படுத்தலும் உத்திரவுக்கு மீறினால் தண்டம் புரிதலும் அரசியல் முறையாகும்.

வர்ணாச்ரம தர்மம் நன்குணர்ந்த மூதறிஞர் ஜனங்களின் யோக்கியதைக்குத் தக்கபடி அல்லது அவரவர்கள் பெற்றுள்ள

அனுபவப்படி உலகு மக்களை நான்கு வகைப்படுத்தி, ஒன்றை சூத்திரவர்ணாச்சிரமம் என்று கூறியுள்ளார். சூத்திரர், முதல்வர், காரணர், ஆதாரமானவர்கள் என்பது பொருளாகும்.

எல்லாவுயிர்களுக்கும் ஆதாரமான உணவுப்பண்டங்களை விர்த்தி செய்தலும், மக்களை மாமிசப் பதார்த்தங்களை யுண்ணா வண்ணம் சாக பதார்த்தங்களைக்கொண்டு உண்பித்தல் பொருட்டு காரணகாரிய பெயராயிற்று.

வைசியர்:—வசியமென்னும் வார்த்தையின் திரிபு. மக்களை அன்போடு உபசரித்தல் முறையாக அவர்கள் விரும்பும் பண்டங்களை கொணர்ந்து கொடுத்து, பண்டமாற்றால் அவர்களை வசியப்படுத்தி அடையும் ஊதியத்தை ஜீவனமாகக் கொண்டவர்களாவர்.

க்ஷத்திரியர்:—க்ஷாத்திரியம் காட்டுகிறவர்கள் அதாவது தவறுதல் புரிவோர்களை இன்னகுற்றத்திற்காக இன்ன விதமாக தண்டிக்கப்படுமென்பதை எச்சரித்து பின்னர் தண்டிக்கிறவர்கள்.

பிராமணர்:—எல்லா உயிரையும் தன்னுயிரைப்போல் பாவித்து ஹிதம் செய்வதே தங்கள் கடமையெனக் கொண்டவர்கள். பாவத்தை விரும்பாதவனும், புண்ணியத்தை கோருகிறவனும், கீழ்மக்களை உயர்த்தி பயிற்றுவிப்பதே தொழிலாகக் கொண்டவனுமாவான். மேற்கூறிய நான்கு வருணாச்சிரமிகளும் தர்மத்தை சரிவர பொது மக்களிடத்தில் ஆற்றும்போதும் அவர்களின் மாறுபடாத செய்கைக்காக இவ்வித கௌரவப்பட்டத்தை பெறுகிறார்கள்.

எனவே ஒருவர்ணாச்சிரம தர்மி, மற்றொரு தர்மத்தை நிறைவேற்றுகிறவனை எதிர்க்கவும், அவன் உரிமைகளை தடுக்கவும், தான் செய்யவேண்டியதையும், தன் தர்மத்தையும்விட்டு மற்றொருவனுடைய அலுவலில் பிரவேசிக்கிறான். அப்பொழுதுதான் ஒழுக்கங்கள்மாறி இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கலவரமும் குழப்பமும் மூண்டு கடிவாளமில்லாத குதிரையைப்போல் யதேச்சை குணங்களதிகரித்து, சமூக நலங்களைவிட்டு, சுய நலங்களில் அக்கறைகொண்டு திரிவார்கள்.

(தொடரும்.)

ஜீவகாருண்ய மில்லாதவர் யார்?

கர்ண தேசத்தில், அணிப்பிள்ளை ஓர் நாள் காலைப் பொழுதில் ஓர் உய்யான வனத்தில் ஒரு கிளையைவிட்டு மற்றோர் கிளைக்கு ஊசலாடிக்கொண்டிருந்தன. அப்பொழுது ஓர் முல்லை நிலத்துமகன் அதன் சருமத்தை விலைகூறி வயிர் வளர்ப்பதற்காக தன் கையிலிருந்த அம்பினால் உளவுபார்த்து அடித்துக் கொன்று எடுத்துச் சென்றான். அப்பரிதாப நிலைமையை யுணர்ந்த பெண் அணில் ஆற்றொணா துயரமுற்று கீச்சென்று கத்திக்கொண்டே தற்காப்பிற்காக அடுத்த தோட்டத்தின் வழியாகச் சென்றது. அங்கு சில கோழிகள் மேய்ந்துகொண்டிருந்தன. கூக்குரலோடு அவணணுகிய அணிலை நோக்கி அதன் வரலாற்றை கோழி கேட்க, ஓர் மானிட துராத்மா தனது நாயகனை யமபதி ஒட்டினான். நான் மட்டும் தப்பி ஓடிவந்தேனென்று கூறிற்று. ஆ! மனிதப் பாபிகளா! கன்மனமுள்ளவர்கள் எனது இறகுகளையும் முட்டைகளையும் உபயோகப்படுத்துவதன்றி எங்கள் மலம் தோட்டக்காரருக்கு பாரம் 50 ரூபாய் மேனிக்கு விற்று பிழைக்கின்றார்கள். அவர்கள் வீட்டைச் சுற்றியுள்ள புழுப் பூச்சி அசுசிகளைத் தின்று சுத்தி செய்துவிடுகிறோம். அப்படியிருந்தும் பயனறியா மட்டிப் பயல்கள் எங்கள் குலத்தையே கொன்று தங்கள் உடலை போற்றுகிறார்கள். இப்பாவிகள் கண்ணுக்கு எட்டிய தூரம் சென்று வாழலாமென்பதை வெகு காலமாக எண்ணிக்கொண்டிருந்த எனக்கு தெய்வகதியால் நீ உதிர்ப்பட்டனை இருவரும் சமீபத்திலுள்ள காடுறைந்து வாழ்வோம் வாவென, அக்குடத்தலைவன் கூற அணில் அதற்கிணங்க அவைகள் காட்டை யடைந்தன.

சோர்வுற்று அவன் குழுமியிருந்த அக்கபோத கூட்டங்கள் ஓர் புதரிற்கூடி சில வேட்டுவ துராத்மாக்களின் அடாத செயல்களைப்பற்றி ஆலோசனை செய்துக்கொண்டிருக்கையில், திடீரென வந்த பிராணிகளின் சோகத்தை முகக்குறியாலறிந்து புறாவரசன் கேட்க, தாங்கள் வந்த சங்கதியை சவிஸ்தாரமாய்ச் சொல்லின. அந்தோ! பாவம்; நாங்களும் அப்பாதகர்களை இப்பொழுது தானே நிந்தித்துக்கொண்டிருந்தோம். நீங்களும் அவர்களுக்கேப் பயந்தீர்கள்போலும். நல்லது என்னோடு வாருங்கள் உங்களுக்கு

இவ்வனத்தின் விசேஷங்களை காட்டுகிறேன் என்று கபோதவரசு சொல்லிக்கொண்டே சுற்று உலாடின.

இஃது இவ்வாறாக, கண்ணியால் பட்சிகளைப் பிடிக்கும் குருஞ்சி நிலமாக்களால் வெருட்டப்பட்டு இராமுழுதும் நித்திரை கெட்டு அயர்ந்து நித்திரையினின்றெழுந்த சம்புகள் பல ஜாதி பிராணிகள் ஒன்றுபட்டு குழுமிவருவது ஏதோ ஓர் காரணமாகத்தானிருக்க வேண்டுமென்று யூகித்து வாளாயிருக்கப் பொறாமல், புறாவரசைப் பார்த்து மித்ரா நீங்கள் ஏதோ ஓர்வித கவலை வாய்ப்பட்டு மனமாறுவகையாக ஏமாந்த பார்வையுடன் செல்கின்றீர்கள்போலும்; என; புறாவரசு அதற்கு மறுமொழியாக கீழ்கூறியபடி மொழிந்தது. "அருமை நண்ப யாதொரு ஜீவனையும் கொன்று தின்னாமல் தானியங்களையே தின்று ஜீவிக்கும் கபடற்ற புறாக்களாகிய எங்கள் இனத்தாரை மானிடப் பதர்கள் சுட்டு கொல்வதற்காக குறி வைக்கின்றார்கள். எங்கள் கதி இவ்வாறாக, தன் நாயகனை தோலுக்காக அபகரித்துச் சென்ற பாபியால் இழந்த கைம்பெண்ணாகிய இந்த அணிலின் வியாகூலத்தை தணிக்குமாறு என்னோடு கூட்டி வந்தேன் வேறொன்றுமில்லை யென்று புகன்றது. அதுகேட்ட ஓரி தன் கைவிரல்களால் இரண்டு காதுகளையும் அடைத்துக்கொண்டு சிவ! சிவ! என்று உச்சரித்து நான் திரிலோக சஞ்சாரியான நாரதரைப்போல் ஐந்து நிலத்திலும் வசிக்கிறேன். முந்தைநாளில் உணவு தேடும்பொருட்டு கிராமத்தை யடைந்து அங்கு நடந்த சில விஷயங்களை கண்ணுற்றேன். அங்கு சிலர் மனிதரே பொய், களவு, கள், பேராசை கொலைகளுக்கு மூலப் பொருள்கள், அவர்களைப்போல வேறு ஒரு ஜந்துவும் இவ்வுலகி லில்லையென்று வாதாடினார்கள். அதற்கனுகுணமாக நான் திரும்பி வருகையில் சில குறவர்கள் நான் வருவதைக் கண்டு தடியை ஓங்கிக்கொண்டு ஓடி வந்தார்கள் நான் திடுக்கிட்டு ஓடிவந்து இரா முழுதும் பயத்தால் கண்ணிமைக்காமல் இப்பொழுதுதான் தூங்கி விழித்தேன். எங்கு சென்றாலும் மானிடப் பூண்டுகளின் அடாத செயல்களையே கண்டிக்கப்படுகின்றன. இதற்கு ஓர் உபாயம் உளது. இவ்வனத்திலுள்ள மிருகராஜனிடம் இதைப்பற்றி கூறின் அவரால்மட்டும் ஒருவேளை இவ்வித இடையூறுக்கு பரிகாரம் தேட முடியுமென நினைக்கிறேன், என்று கபடன் கூற, அவ்வண்ணமே அவ்வனச் சிங்கத்

ஸ்ரீ காந்தியடிகள் சரிதம்.

ஆபத்பாந்தனும், அநாதரக்ஷகனும், பக்தர்களுக்கு ஹிதம் செய்பவனுமாகிய சாக்ஷாத் பகவான், தமது அடியார்களை துன்பக்கடலிலிருந்து மீட்கும் பொருட்டு மானிடதேகந்தாங்கிய மனிதர்களிடையே அவதரித்து சன்மார்க்கவழிகளை யொழுகிக்காட்டுவது இயற்கையென்பது இந்துமதக் கொள்கை, உலகத்தில் சமூகதர்மங்களை நான்குவகைப்படுத்தியிருப்பதால் எக்காலத்து எந்த தர்மம் குறைவுபட்டு க்ஷீன திசையடைந்துளதோ அவ்வித தர்மம் சிறந்து விளங்குமாறு மக்களைஉற்சாகப்படுத்தி நல்வழிப்படுத்தும் நோக்கத்துடன் அவதார புருஷர்கள் அவதரிக்கின்றார்கள்.

இக்காலத்தில் சாந்தஸ்ரூபமான இந்து மக்கள்மேல்நாட்டு பயங்கரமான ஆக்ஷிமுறையில் சிக்குண்டு, செய்வதின்னதென்று பிர்ம்மை கொண்டிருக்கும் சமயத்தில் ஓர் மகாத்மா தோன்ற வேண்டிய தவசியமாயிற்று.

இதனால் தற்கால நவீன ஆக்ஷிமுறையில் பழைய சன்யாசிகளுக்கும் முதியோர்களுக்கும் கௌரவமதிகமில்லை, தமிழில் பேர் போன ஞானியை ஆங்கிலமுணர்ந்தவர்கள் அசட்டை செய்வார்கள். அப்படியே ஆங்கிலமுணர்ந்த சந்யாசியானாலும் பொருளில்லாவிட்டால் அவர் பேச்சுக்கு மதிப்பேர்ப்படாது. இவைகளெல்லாம் ஒருவனிடம் காணப்பட்டாலும் ராஜாக்களும், மேல் நாட்டிலுள்ள சில கொள்கையினரும் அவர் வார்த்தைக்கு செவி சாய்க்க மாட்டார்கள். தவிர ஓர் மதத்திலிருப்பவன் எவ்வித மேலான உண்மைபோதித்த போதிலும் மற்றொரு மதஸ்தர் அதை ஏற்கவே மாட்டார்கள். இவ்வாறே சமயங்களும், மதங்களும், ஜாதிகளும், தேசங்களும் விரோதப்பட்டுக்கொண்டேயிருந்தன. எனவே எச்சமயத்தவரும், எத்தேயமக்களும், எந்நிலைமையினரும்எவ்விதகொள்கையுடையவரும் சரி சரி யென்று கூறி ஒன்றுபட்டு சமாதானமும் சமரஸமும் நிலவுமாறு அவதாரம் செய்தவர் நமது மகாத்மா காந்தியடிகளாகும். இவர் கிருஷ்ண பரமாத்மாவுக்கு பின்னர் இயேசுவாக அவதரித்து 2000 ஆண்டுகளுக்கு பின்னர் அவதரித்த அவதார புருஷராகும். (தொடரும்.)

சமயஞானம்.

ஆரோக்கியமும், நித்திய அநுட்டானமும்.

சரீரத்தில் உள்ள இரத்தம் அசுத்தமாகிய காரிரத்தமாயின், வியாதி உண்டாகும்; சுத்தமாகிய செவ்விரத்தமாயின், வியாதி உண்டாகாது. அசுத்தவாயுவைப் பூரித்தாற் செவ்விரத்தமும் காரிரத்தமாகும். சுத்தவாயுவைப் பூரித்தாற் காரிரத்தமும் செவ்விரத்தமாகும்; ஆதலினால், எப்போதும் சுத்தவாயுவையே பூரித்தல்வேண்டும். தன்னாலும் பிறராலும் இரேசிக்கப்பட்ட காற்றும் துர்க்கந்தம் அளாவிய காற்றும் அசுத்தமாகிய நச்சுக்காற்றாகும். காற்றில்லாத ஒடுங்கிய வீட்டினுள்ளும் நெருங்கிய ஜனக்கூட்டத்தினுள்ளும் இருக்கலாகாது. இருந்தால், அசுத்தவாயுவே உட்கொள்ளப்படும். அதனால் விளையுங்கேடு தற்காலத்தில் விளங்காதாயினும், சற்றே காலஞ் செல்லச் செல்ல இனிது விளங்கும்.

யாவரும் தாம் தாம் இருக்கும் அறையிலுள்ள காற்றுச் சுத்தமாய் இருக்கும் பொருட்டு அங்கங்கே வேண்டுமட்டுங் காற்று வீசப்பண்ணிக்கொள்ளல்வேண்டும். அறையினுள்ளே சுத்தவாயு வீசவேண்டுமாயின், ஒருபலகணியாயினும் வைத்துக்கொள்ளல் வேண்டும். நிலமட்டத்தில் அசுத்தவாயு அளாவியிருத்தலினாலே, கீழே படுக்காது கட்டிலின் மேற்படுப்பதே உத்தமம்.

தோலிலே ஒளி படுவது சரீரத்துக்கு ஆரோக்கியத்தை விளைவிக்கும். தரைமட்டத்திற்றாழ்வாயும் ஈரமாயும் இருளுள்ளதாயும் உள்ள அறையினுள்ளே இருந்து வேலைசெய்வோர் சரீரம் வெளுத்து வியாதியடைகின்றனர். தோலை ஊடுருவிச் செல்லும் ஒளி அத்தோலுக்கு மாத்திரமன்றி, இரத்தத்துக்கும் நயத்தைக் கொடுக்கும் அந்த நயம் அதன் வழியாக உடம்பு முழுதினுஞ் செல்லும்; ஆதலினால் வீடுகளும், மடைப்பள்ளிகளும் பள்ளிக்கூடங்களும், கம்மியர்சாலைகளும் காற்றுவீசத் தக்கவைகளாய் மாத்திரமன்றி வெளிச்சம் நன்றாகச் செல்லத்தக்கவைகளாயும் இருக்கவேண்டும்.

சூரியகிரணமானது, பயிர் செடி முதலிய தாவரங்களுக்குப் போலவே, மனிதருக்கும் நன்மையைக்கொடுக்கும். நிழலிலே வளரும் பயிர்கள் வெளுத்து, சூரியகிரணம் படும் பயிர்களைப்பார்க்கி

னும் மிகப் பலங்குறைந்திருக்குமன்றோ! அதுபோலவே, இருட்டறைகளில் இருக்கும் மனிதர்கள் வெளுத்து, நல்ல வெளிச்சம்பொருந்திய வீடுகளில் இருப்பவர்களைப் பார்க்கினும் மிகப்பெலங்குறைந்திருப்பார்கள்.

சுத்தவாயு உள்ள இடங்களிலே, நாடோறும் சரீரம் வேர்த்துகளைக்கும்படி அதிகநேரம் வேலைசெய்தல் வேண்டும். அது கூடாதபோது, சுத்தவாயுவு உள்ள இடங்களிலே ஓடி உலாவி திரிதல் வேண்டும். உலாவுதலுக்கு மாலைப்பொழுதினும் காலைப்பொழுதே உத்தமகாலம். சூரியன் அஸ்தமிக்குங்காலத்திலும் பார்க்கப் பகற்காலத்தில் வேலைசெய்தலே ஆரோக்கியத்திற்கு ஏதுவாகும்.

காலந்தோறும் போசனம் ஒழுங்காகச்செய்து வருதல் போலவே சரீர முயற்சியும் ஒழுங்காகச் செய்துவரல் வேண்டும். சிலநாள் ஒழுங்காகச் சரீர முயற்சி செய்துகொண்டு வந்து ஒருநாட் செய்யாது விட்டால், அது சிலநாள் ஒழுங்காகப் போசனஞ் செய்துகொண்டுவந்து ஒருநாட் போசனஞ் செய்யாது விடுதல்போலும்.

குனிந்த நிலையிலும் நிமிர்ந்த நிலையே ஆரோக்கியத்தை விளைவிக்கும். ஆதலினால், இருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், வேலை செய்யும் போதும் சரீரம் குனிந்த நிலையின்றி நிமிர்ந்த நிலையுடையதாகவே இருத்தல்வேண்டும்.

நிமிர்ந்த நிலையினாலே சரீரத்தவயவங்கள் பலவும் செவ்வையாக இயங்கப்பெற்று அழகுடையனவாய் விளங்கும். குனிந்த நிலையினாலே மார்பு ஒடுங்கி, வயிறுதாழ்ந்து, தோள்கள் கவிந்து, சரீரம் நோயடையும். குனிந்த நிலையினும் பார்க்க நிமிர்ந்த நிலையிலே நெடுநேரம் அதிக வேலைசெய்யலாம். பிள்ளைகள் தலையுந் தோள்களும் கூனிப்பழகும்படி ஒருபோதும் விடலாகாது.

குனிந்த நிலையிலும் பார்க்க நிமிர்ந்த நிலையிலே சுவாசக்கருவிகளெல்லாம் செவ்வையாக இயங்கும். அப்பொழுது உண்டாகும் சத்தம் மிகத்தெளிவாக விளங்கும்.

பெண் கல்வி.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமெனும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

என்னும் ஆன்றோர் கல்வியின் பொருளையுற்று நோக்குங்கால் பொதுவாக இஃது ஆடவர் பெண்டிர் யாவர்க்கும் நீதி கற்பிக்க வந்ததோர் செய்யுளென்பதைக் காட்டினும் சிறப்பாகப் பெண்களுக்காகவே கூறப்பட்டதோர் நீதிச்செய்யுள் என்று கூறுவது மேலாகத்தோன்றும். ஆதலால் கல்வியைப் பெண்கள் கற்றல் அவசியமென்பது இனிது விளங்கும். கல்வியின் பயனும் அதன்பெருமையும் இத்துணைய வென்பது இதுகாறும் ஒருவராலும் வரையறுக்கப்பட்டதன்று. இத்தகைய மாட்சிமையுற்ற கல்வியை ஆடவரேயன்றிப் பெண்டிரும் கற்றுணரவேண்டியதவசியம் என்பதே இவ்வியாசத்தின் முக்கிய நோக்கமாம்.

யான் இங்ஙனம் கூறுவதில், எனதினின்றும் மாறுபட்ட கொள்கையினராய்ச் சிலர் கிளம்பி, ஸ்திரீகள் கற்பதனாற் பயன் யாதுமில்லென்றும் முற்காலத்துப்பெண்கள் யாவரும் கற்றிருந்தனரோ வென்றும் வாதாடத்துணிவர் அவர்க்குப்பிற் கூறும் சமாதானம் ஒவ்வும்.

உலகில் ஒவ்வொருவர் தன்மையும் அவரது செய்கையாலன்றி யறியவியலாதென்பதுண்மை. அங்ஙனமே பண்டைகாலத்து ஸ்திரீகள் கல்விப்பெற்றும் நாகரீகமடைந்து மிருந்தனரா வென்பதை நாம் நேரிற் பார்த்திராவிடினும் அவர்கட்கவ்வப்போதுண்டான உள்ள நிகழ்ச்சியிருந்தவாற்றானும் அவர்கள்கொண்ட ஒழுக்கம் முதலியவாற்றானும் மற்றும் அவர்களது உயர்வமைந்தவும் போற்றப்படுபவுமாகிய செய்கைகளானும் அன்னோர் கல்விஞானம்பெற்றிருந்தனரென்றே யூகிக்கவேண்டியிருக்கின்றது. அன்றியும் கல்விமிகுதியாகக்கற்ற பெரியோர்களிருக்கும் உயர்ந்த நிலையையாவது தற்காலத்திற் பிரத்தியக்ஷமாய்க் கண்டறிந்தவர் கற்பதனாற் பயனில்லென்று கூறுவரா?

இனிச்சிலர் பெண்கள் தகப்பனுற் பயனுண்டென்னும் நம்பிக்கையுடையராயினும் 'மாதர்கள் கல்வி பயின்று மேன்மையடைந்த அக்காலம் வேறு, இக்காலம் வேறு' என்னும் கொள்கையுடையராய்க்காலபேத வியல்புக்கேற்றபடி யொழுகவேண்டுமென்பார். உலகில் ஒவ்வோரிடத்தும் ஒருகாலத்திலில்லாதது மற்றொரு காலத்து வளர்ந்தும் ஒருகாலத்துள்ளது மற்றொரு காலத்துத் தேய்ந்தும் வருவதியற்கை. இவற்றுள் முன்னது முயற்சியும் பின்னது முயற்சியின்மையும் காரணமாகக்கொண்டு தோன்றுவனவாம். ஆதலால் கீழ்க்கூறியபடி இக்கல்வியும் நம்தேசத்தில் முன்னொருக்கால் பிரஜைகளின் நன்முயற்சியால் தலையெடுத்து வளர்ந்தும், பின்னாளடைவில் ஜனங்களின் முயற்சிகுறைவால் அஃது சிறுகிச்சிறுகித்தேய்ந்துமிருக்கலாம். இவ்வாறு தேய்வுற்றதைக்கண்ட நாமும் செந்நெறி பிழைத்தோன் திசை மயங்கிற்றென மொழிவதை நிகர்ப்பக் காலத்தின்மேல் பாரத்தைச் சுமற்றி இக்கல்வியை வளரச் செய்வதற்கேதுவான சாதனங்களையும் முயற்சிகளையும் தேடாமல் வாளாவிருப்பது பெரிதும் பேதமை யன்றோ.

ஒன்றை நிரூபிக்கவேண்டின் சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் மூன்று சாதனங்கள் உண்டு. அவ்விதிக்கிணங்கவே நம்மாலெடுத்துத் தாபிக்கப்படும் ஓர் விஷயமானது முன்னர் ஈசுவராக்ஞையாகிய வேதத்திற்கு பொருந்தியுளதா வென்றும் பின்யுக்திக்குப் பொருத்தமானதாவென்றும் அதன்பின் அஃது அநுபவத்திலும் பொருத்தமுடையதாவென்றும் ஆராய்ந்தறியவேண்டும்.

மேற்கூறிய இம்மூன்று சாதனங்களைக்கொண்டும் ஆராய்வோர் பெண் கல்வியை மறார் என்பது திண்ணம்.

மேல்நாட்டைக் காட்டிலும் நம் தேசத்தில் கல்வி கற்போர் மிகச் சிறு தொகையினர். அவரினும் நனி மிகு சிறு தொகையினராவர் பெண்பாலாயிருந்து கல்வி கற்போர் இங்ஙனம் நம் தேயத்தில் தமது நல்வினைப்பயனுற் கற்றற்கு முன்னேறிவரும் சிறு பான்மையரான ஸ்திரீகளையும், அந்தகாரத் தகப்பட்ட மாந்தர் சிலர் தாம் ஒளி பெறும் பொருட்டேற்றிய தீபம் சுடர்விட்டெரியத் தொடங்கும்போது அதனையவிக்க விரைவில் வரும் சூறைக் காற்

றினைப்போலும் செல்வப் பொருள் சிறிதுமின்றி வறுமையாற் பிடியுண்டு வயிற்றிற்கின்றி வருந்து மிரவலாளன் வந்தேற்க அவர் கிரங்கித் தம்மாலியன்றது கொடுக்கத் துணிவாரைத் தடுக்கப் புகுவார் போலும், பெண்கள் கற்பது பேதமையென்று பிதற்றி அவர் கற்பதைத் தடுக்க முன்வருவார் பலராயுள்ளனர். இன்னும் பலர் மாதர்கள் கற்பதாற் செருக்குற்றுச் கேட்டிற் காளாவர் என்றும் கூறுவர். இவரே கரும்பின் கட்டி கைப் பென்பாரையும், ஆவின் பால் அருப் புளிப் பென் பாரையும் நிகர்ப்பதுமன்றி அவ்விரண்டும் உயிர்க் கிறுதிவிளைக்கும் பொருள்களெனக் கூறுமறிவின்றையும் நிகர்ப்பர். இங்ஙனம் கூறுவோர் ஆடவர் கல்வியை மாத்திரம் எங்ஙனம் அங்கீகரித்னரோ தெரிந்திலது.

ஸ்கௌட், பக்கத் தொடர்ச்சி.

நெருப்பு, நீரில் முங்கல், முறட்டுத்தனமாய் ஓடும் வண்டி சாக்கடையிலிருந்து வெளிரும் துர்வாயு இவை போன்றவைகளால் நேரிட்ட அபாயங்களிலிருந்து காப்பாற்றும் வழியை விவரமாய்ச் சொல்லவேண்டும். காயம்பட்ட ஒருவனுக்கு சாயம் கட்டிக் காண்பிக்கவும் நீரில் அமுங்கி மயக்கமானவனை மயக்கம் தெழிய வைக்கவும் வேண்டும்.

முன் கூறப்பட்டதைவிட கொஞ்சம் அதிகமாகவும் பல தினுசுகளாகவும் சமையால் செய்யவேண்டும்.

ஸ்தலங்களைக் காட்டிய படங்களை சரியா யறியவும், படம் வரையவும், திசை காட்டும் கருவியின்றி திக்குகளைக் காட்டவும் அறியவேண்டும்.

மரம் வெட்டவும், தச்சு கொல்ல வேலையில் ஏதாவது தானுகை செய்யவும் தெரிந்துகொள்ளவேண்டும்.

தூரம், விஸ்தீரணம், பருமன, எண்ணிக்கை, உயரம், கனம் இவைகளை கால்பாகம் ஏற்ற தாழ்ச்சிக்கு அதிகமாகாமல் மதிக்கத் தெரியவேண்டும்.

டெண்டர்புட்டுக்கு தெரியவேண்டிய விஷயங்களை ஒருவனுக்கு கற்பித்துப் பரீக்ஷித்துக் காட்டல்.

இவ்விதமாய் மேற்கூறிய சோதனைகளில் தேறினால் 1-வது வகுப்பு ஸ்கௌட் ஆகலாம். முதலாவது வகுப்பு ஸ்கௌட் குறிப்பிட்ட பரீக்ஷைகளில் தேறினால் மேலான அதிகாரங்களையும், கௌரவங்களையும், விருதுகளையும் அடையலாம். ஒரு ஸ்கௌட் உயிரைக் காப்பாற்றுவதிலும் மற்ற ஜனோபகாரங்களிலும் அதிசயச் செயல்களைச் செய்வானாகில் அவைகளுடைய ஸாஹஸத்துக்குத் தக்கவாறு பதக்கம் முதலியன வெகுமதிகளும் அவனுக்கு அளிக்கிறதுண்டு. ஸ்கௌட்கள் அணிவதற்கு குறிப்பிட்ட உடைகள் உண்டு. அவைகளையே தரிக்கவேண்டும்.

ஸ்கௌட் விதிகள் பின் வருமாறு:—

"என் கௌரவத்தின் ஆணைப்படி" என்று எந்த வார்த்தையை ஒரு ஸ்கௌட் சொன்னால் அது உண்மையாய்தானிருக்க வேண்டும்.

ஸ்கௌட் உத்தியோகஸ்தர் உன் கௌரவத்தின் ஆணையின் பேரில்" இதை செய்து தீரவேண்டும் என்றால் அவனால் கூடிய வரை அதைச் செய்தே தீரவேண்டும். ஒரு ஸ்கௌட் பொய் சொன்னாலும், அல்லது அவன் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்ற நம்பிக்கையான உத்ரவை மீறினாலும் சரி, அவனுடைய ஸ்கௌட் அடையாளங்களையும் பிடுங்கி, ஸ்கௌட்டாக இருக்க லாயக்கில்லையென்று உத்திரவிடலாம்.

2 ஸ்கௌட் என்பவன் அரசனுக்கும், அரசனுடைய உத்தியோகஸ்தருக்கும், தாய் தகப்பன்மாருக்கும், தேசத்துக்கும், அவனுடைய யஜமானனுக்கும் விசுவாசம் பாராட்டவேண்டியது. எவ்வளவு கஷ்டம் வரினும், அவர்களுக்கு உதவி செய்து வர வேண்டும்.

3. எவ்வாற்றானும் மற்றவர்களுக்கு உதவி புரியவேண்டியது தன்னுடைய சுகம், சௌகரியம், இவைகளையிழக்க வேண்டி வந்தாலும், பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.

4. ஸ்கௌட் எல்லோருக்கும் மித்திரன். எல்லா ஸ்கௌட்களும் என்ன ஜாதி அந்தஸ்துள்ளவர்களானாலும் ஒருவருக்கொருவர் சகோதரர்களாவார்கள்.

5. ஸ்கௌட் எல்லோரிடத்திலும், அதிலும் முக்கியமாக ஸ்திரீகள், குழந்தைகள், வயோதிகர்கள், பிணியாளிகள் முதலியவர்களிடத்திலும் மிருதுவாயும் மரியாதையாயும் பேசவேண்டும். எவ்வுதவிக்கும் கைம்மாறு பெறுதல் கூடாது.

6. ஸ்கௌட் பிராணிகளுக்கு மித்திரன். ஒரு ஜந்துவையும் ஹிம்சிக்கக்கூடாது.

7 ஸ்கௌட் உத்தரவுக்கு கீழ்படிவான். தாய் தகப்பன்மார் தலைவன் இவர்கள் உத்தரவை உடனே செய்தே தீரவேண்டும். அந்த உத்தரவு எவ்வளவு சரியில்லையென்று தோன்றினாலும், தனக்கு பிடிக்காததா யிருந்தாலும் அதைச் செய்துவிட்டு பிறகு வேண்டுமானால் அந்த உத்தரவு கூடாதென்பதற்கு காரணங்கள் உண்டானால் தெரிவிக்கலாம்.

8. என்ன சங்கடங்கள் வந்தபோதிலும் ஸ்கௌட் சிரித்த முகமாய் உத்ஸாகமா யிருக்கவேண்டும். எந்த உத்தரவையும் உத்ஸாகமாசமாய் நிறைவேற்றவேண்டும். முகத்தை தொங்கவிட்டு முணுமுணுத்துக்கொண்டு செய்யக்கூடாது.

9. ஸ்கௌட் செட்டாய் இருக்கவேண்டும்.

10. மனோவாக்கு காயங்களில் ஸ்கௌட் சுத்தமாய் இருத்தல் வேண்டும்.

கைத்தொழில்.

வாசனைசோப் செய்யும் விதம்.

வெங்கார பஸ்பம் அவுனஸ் 1, மீன், மாடு முதலிய எந்த கொழுப்பாவது $\frac{1}{2}$, அவுன்ஸ் சேர்க்க இஷ்டமில்லாதவர்கள் சுத்தமான மணிலா பவுடராவது அல்லது வெள்ளைமெழுகாவது $\frac{1}{2}$ அவுன்ஸ் சேர்த்துக்கொண்டு 4 பலம் ஜலம் விட்டு காய்ச்சி விநோலியா ரோஸ் பவுடரை $\frac{1}{8}$ அவுன்ஸ் தூவி கையில்ஒட்டாத பாகுபதத்தில் இறக்கி அச்சுகளில் வார்த்து தகுந்தபடி பாக் செய்து விற்பனைக்கோ சொந்தத்திற்கோ உபயோகப்படுத்தலாம்.

ஓமவாட்டர் செய்யும் விதம்.

ஓர் வாய்குறுகிய பாத்திரத்தில் 4 பலம் ஓமம் 2 படி ஜலம் போட்டு வாயில் வாலே வைத்து அடுப்பிலேற்றி கொளுத்தினால் நீராவி ஜலமாக குழாய் வழியாய் ஓடிவரும். அதைப் பாத்திரத்தில் பிடித்து புட்டிகளில் பாக் செய்யவும்.

வயிற்றுவலிக்கு இங்கிலீஷ் மருந்து.

லைக்வர் ஜூபிடர்	அவுன் 1
லைக்வர் மார்பியா	டிராம் 1
(சிரப்) இஞ்சி சர்பத்து	டிராம் 1
ஆக்வா குலோராபாரம்	அவுன் 6

இவைகளைச் சேர்த்து வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 3 வேளை சாப்பிடவும்.

குடும்ப வைத்தியம் தமிழ் முறை.

ஓர் குடும்பத்தில் அகஸ்மாத்தாய் நேரிடும் சாதாரண வியாதிகளெல்லாம் ஜலம், நீராவிமண், புகை முதலியவைகளினால் குணப்படுத்தலாம் இது அனேகமாய் கிராமங்களில் பல முதியோரால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

ஜலதோஷம், தலைபாரம், சளி இருமல், நீரேற்றம் முதலிய வியாதிகளுக்கு கம்பளி போர்வையால் காற்று புகா வண்ணம் போர்த்திக்கொண்டு நீராவி வேடு பிடித்தால் வேர்த்து தேகத்தில் உள்ள நீரெல்லாம் வெளிப்பட்டு சுகந்தரும்.

தேகத்தில் உஷ்ணம் அதிகரித்திருக்கையிலும் கண் எரிச்சல், கால் எரிச்சல், காயம்பட்டு ரத்தம் வெளிப்படுகையிலும், வெகுதூரம் நடந்து கால் நோகும்போதும் புதுப்பாத்திரத்தில் சுத்த ஜலத்தை குளிர்ச்சிப்படுத்தி பல தடவைகளில் துணிகளில் நனைத்து கண்களைக் கழுவவும், தேகத்தில் நோயுள்ள இடத்தில் பல தடவைகளில் துவட்டவும், கால்வீக்கத்தில் குளிர்ந்த ஜலத்தால் கழுவவும், வெட்டுக்காயம் படும்போது குளிர்ந்த ஜலத்தில் நனைத்து துணி பீஸை சுற்றி ஜலத்தில் நனைத்துக்கொண்டேயிருக்கவும். ஐஸ்கட்டி கிடைக்குமிடங்களில் மேல்கண்ட பரிகாரங்களெல்லாம் குளிர்ந்த ஜலத்துக்குப் பதில் உபயோகப்படுத்தலாம் கடுமையான வேலை செய்து களைத்து மூர்ச்சையாகும் சமயத்திலும், தாகமெடுத்தல் மிடறுநோதல் மெய் மறத்தல் முதலிய சமயங்களிலும் குளிர்ந்த ஜலத்தை உள்ளுக்கு கொடுக்க பூர்ண சுகம் தரும். இந்த முறைக

அரசியல் ஞானம்.

தபால் இலாக்கா சிலவு குறைத்தல்.

தபால் இலாகாவிலிருந்து கிராமதபால் என்று பிரித்துவிட வேண்டும். கிராம தபால் சிலவுகளை கிராம பொதுவிலிருந்தும், தாலூக்போர்டிலிருந்தும் சிலவிடவேண்டும் ஒவ்வொரு கிராம வட்டங்களிலும் தபால்பெட்டி இரும்பினாலோ மரப்பெட்டியினாலோ செய்து பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படவேண்டும். தபால் விஷயங்களை ஓர் உபாத்தியாயர் கவனித்து வரவேண்டும். கிராம தபால்களை வாங்கிக்கொண்டுவரவும் பட்வாடாசெய்யவும் சர்க்கார் தோட்டிகளையும் ஊர் தோட்டிகளையும் உபயோகப்படுத்தலாம். கிர்ாம தாபால்களெல்லாம் நேராக ரிவினியூ பிர்க்காவிலிருக்கும் பிராஞ்சு போஸ்டாபீசுக்கு கொண்டு சேர்க்கவேண்டும். ரிவினியூ பிர்க்கா தவிர மற்ற இடங்களில் பிராஞ்சாபீஸ் அவசியமில்லை. ரெவினியூ பிர்க்காவிலிருந்தால் அந்த வட்டத்திற்கு வேண்டிய ரெவினியூ, சிவில், கிரிமினல் தபால்களை தோட்டிகளிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு கொடுத்துவிடலாம். வாரண்டு தவிர மற்றெல்லாவித சம்மன்களையும் பிராஞ்சாபீஸ் மூல்யமாய் வந்து தோட்டிகள் மூல்யமாய் மணியக்காரருக்கு சார்வு செய்யும்படி அனுப்பலாம். கிரிமினல் வாரண்டு தவிர, சிவில் வாரண்டுகளையும், நேராக மணியக்காருக்கு அனுப்பி தோட்டி மூலியமாய் ஆஜர்படுத்தும்படி செய்யலாம். இவைகளால் சிவில் கிரிமினல் இலாகவிலிருந்து சம்மன் வாரண்டுகளின் சர்வீஸ் சிலவுகளை கிராம தபால்காரருக்கு கொடுபடவேண்டும். தபால் இலாகா சம்பந்த மட்டில் மாதம் 2 ரூபாய் கிராம தபாலாபீசுக்கு கொடுக்க வேண்டும். தளவாடங்கள் அதிகம் அவசியமில்லை அவசியமானல் அது தாலூக்போர்டிலிருந்து சப்பளை செய்யவேண்டும். கிராம தபால்காரன் நடமாடும் சரகத்துக்குள் யாராவது குடிகள் தபாலவது பார்சலாவது கொடுத்தால் அதை இலவசமாய் செய்யலாம். அதற்கு பிரதியாய் வழக்கம்போல் ஜனங்கள் மாசூலில் கொடுக்கும் மேரை என்பதை பெற்றுக்கொள்ளலாம். கிராம தபால்காரன் நடமாடாத சரகத்துக்கு அப்பாலுள்ள இடங்களுங்கு லேபில் யொட்டி தபால்போடவேண்டும் இவ்விதம் செய்வது ஏழை ஜனங்களுக்கு ஓர் சௌகர்ய

மாயிருக்கும் இப்படியே பழைய காலத்தில் நடைபெற்றன. கிராம தபாலின் அம்ஸம் சட்டமான முறைலல்லாமல் ஜன சகஜமான முறையில் நடைபெறல் வேண்டுமென்பதே. இப்படி செய்து விட்டால் பிராஞ்சு ஆபீஸ்களில் தபால்களில் களவுமுதலியவைநீங்கும். கோர்ட்டு பிராசர் சேவகர்களால் வாரண்டுகாரனிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அவனுக்கு முன்னாடியே எச்சரிக்கை செய்து கொண்டுவரும் வழக்கம் ஒழியும், கூடிய வரையில் ஒரே சம்மனிலும், ஒரே வாரண்டிலும் ஆஜர் படுத்தும்படி மணியக்காரருக்கு அறிக்கை செய்வது உசிதம்.

இந்திய வியாபார தீர்வை சட்டமும், அதன் வரலாறும்.

"வர்த்தக மித்திரன் பத்திராதிபர்"
ஸ்ரீமான் கோ. நடேசய்யர் எழுதினது.

ஒரு நாட்டின் வியாபாரமும், கைத்தொழிலும் விருத்தியாக வேண்டுவதற்குக் கவர்ன்மெண்டாருடைய உதவி அவசியம் வேண்டுமென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. கவர்ன்மெண்டார் செய்யக்கூடிய உதவி பலவிதமாயுள்ளது. புதிய தொழில் ஏற்படுத்தும் விஷயத்தில் கவர்ன்மெண்டார், பொருளுதவி செய்யலாம். பொது ஜனங்களுக்குத் தொழிற்கல்வி கற்றுக்கொடுக்கலாம். நிபுணர்களைத் தருவித்துத் தொழிலாளர்களுக்கு உதவி புரியலாம். இயந்திரங்கள் வாங்கும் விஷயங்களில் புத்திமதிகளை சொல்லலாம். ரெயில்வே கம்பெனி, கப்பல் கம்பெனி முதலியவைகளைக்கொண்டு போக்குவரவில் சௌகரியங்களைச் செய்து கொடுக்கலாம். பொது ஜனங்கள் புதிதாய்த் தொழில் ஆரம்பிக்க எண்ணுங்காலத்தில் பணம் தாராளமாய்க் கிடைக்கவேண்டியதை உத்தேசித்து, வரும் நஷ்டத்தை ஈடு செய்வதாகவாவது அல்லது குறிப்பிட்ட விகிதத்திற்கு வட்டிகுறையும் பட்சத்தில் குறைந்தவிகிதத்தைத் தாங்கள் ஈடு செய்வதாகவாவது வாக்குக் கொடுத்தவலாம். மேற் சொல்லிய வழிகளைத் தவிர வேறு ஒரு முக்கியமான

வழியுமிருக்கிறது. அதாவது, உள் நாட்டில் ஏற்கனவே இருக்கும் தொழில்களில் செவ்வனே நடந்துவரும் தொழில்களைக் காப்பதற்கும், புதிதாக தொழில்களை ஏற்படுத்தி வசதி செய்து கொடுப்பதற்குமாக, பல வரி முதலிய காப்புகளை ஏற்படுத்துவதாகவும், இவ்வாறு வரி ஏற்படுத்துவதால் அந்நிய நாட்டுச் சரக்குகள் உள் நாட்டுச் சரக்குகளுடன் போட்டி போடுவதைத் தடுப்பதற்கும், உள் நாட்டுச் சரக்குகள் அன்னிய நாட்டுச் சரக்குகளுடன் போட்டிப்போட ஏதுவாய் இருப்பதற்கும் உதவியாயிருக்கும். இவ்விதமாய்க் கைத்தொழில், வியாபார விஷயமாய். கவர்ன்மெண்டார் எம்முறையை அனுஷ்டிக்கிறார்களோ அதைப் பொருத்தே அவற்றின் அபிவிருத்தி நிற்கிறது.

இருவகை முறைகள்.

கெவர்ன்மெண்டர் வியாபாரவிஷயத்தில் அனுஷ்டிக்கக்கூடிய முறைகள் இருவகைப்படும். அவை "தடைப்படுத்தப்பட்ட வியாபாரமுறை" (Protective Trade Policy) தடைப்படுத்தப்படாத முறை (Free Trade Policv) எனபனவாம தடைப்படுத்தப்பட்ட வியாபார முறை என்பது, உள் நாட்டுத்தொழில்களைக் காப்பாற்றும் நிமித்தம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்குகளுக்கு வரியை விதிப்பது. உதாரணமாக இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு ஏராளமான பருத்தித்துணிகள் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன. இவை இந்தியாவில் செய்யப்படும் துணிதளை விடக் குறைந்த விலையுள்ளனவாயிருக்கின்றன. குறைந்த விலையில் இவைகளுக்கு ஏற்படக்கூடிய சௌகரியத்தை பாதகப்படுத்தகூடிய விதமாய் இறக்குமதிச் சரந்குகளின்பேரில் வரியைப் போட்டுவிட்டால், இறக்கு மதியாகும் சரக்குகள் உள் நாட்டு சரக்குகளுடன் போட்டிப் போட முடியாது. இவ்வாறு உள் நாட்டுத் தொழில்களைக் காப்பாற்று நிமித்தம், இறக்கு மதியாகும் சரக்குகளுக்கு வரி போட்டுத் தடுக்கும் முறைக்கு "தடைப்படுத்தப்பட்ட வியாபார முறை" என்று பெயர்.

"தடைசெய்யப்படாத வியாபார முறை:

வியாபாரம் விருத்தியாவதற்குப் போட்டியில்லா திருப்பது சௌகரியமல்லவென்று எண்ணுபவர்கள் இருக்கிறார்கள்,

போட்டிபோட்டு ஜெயிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் சில வியாபாரிகளும் கூலிகளும் மிகவும் ஊக்கத்துடன் வேலை செய்து வருவார்கள் என்பதற்கு ஐய்யமில்லை. ஆனால் சரியான வசதிகள் இல்லாத் தொழில்கள் போட்டிப்போட்டு ஜெயிப்பது முடியாத காரியம். ஆகையால் வசதியில்லாத தொழில்களுக்கு சர்க்கார் மூலமாய் வசதி ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

இந்திய தொழில்கள்.

இந்தியாவிற்கு வேண்டிய முக்கிய சாமான்களையும் சற்றேறக்குறைய இந்தியாவிலேயே செய்துக்கொள்ளக் கூடிய வசதிகள் இருந்து வருகின்றன. இவ்வித வசதிகள் இருந்த காரணத்தால் தான் இந்தியாவானது வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் மகோந்நத தசையை அடைந்திருந்தது. இந்திய அரசர்கள் ஆண்டு வந்தகாலத்தில் அந்தந்த நாடுகளில், வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றின் அபிவிருத்திக்கான பல சௌகரியங்களையும் அவ்வரசர்கள் செய்து கொடுத்துக்கொண்டு தான் வந்தார்கள். இந்தியாவைக் கொள்ளை யடிக்கவேண்டுமென்று வந்த இரண்டொரு முகம்மதிய சுல்தான்களைத் தவிர, மற்ற முகம்மதிய மன்னர்கள் எல்லோரும் இந்தியாவைத் தங்கள் நாடாகச் செய்துகொண்டபடியால் நாட்டின் அமரிக்கையைப் பாதுகாப்பதுடன் கைத்தொழில் அபிவிர்த்தியிலும், ஆவலுடன் கவனத்தைச் செலுத்திப் பல சௌகரியங்களைச் செய்துக்கொண்டு வந்திருப்பதாகச் சரித்திரங்களினின்றும் தெரிகிறது.

ஈஸ்ட் இந்தியா கம்பெனி.

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் முதன் முதல் வியாபாரம் செய்யவேண்டு மென்ற எண்ணங்கொண்டு இந்தியாவுக்கு வந்தனர் பல துறைமுகங்களிலும் வந்திரங்கி, சுதேச அரசர்களை அனுசரித்து நின்று தங்களுக்கு வேண்டிய சில சௌகரியங்களைப் பெற்றுக் கொண்டு வந்தார்கள். காலம் செல்லச்செல்ல, சுதேச மன்னர்களுக்குள் சண்டைசச்சரவுகள் உண்டாக, இதுதான் சமயமென்றெண்ணி, அவர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்து சிறிது சௌகரியம் பெறுவதும், பிறகு வேறு கட்சியைச் சேர்ந்து வேறு சில சௌக

ரியம் பெறுவதுமாய் நாட்டில் தங்கள் ஆதீனத்தை விருத்தி செய்யத்தலைப்பட்டார்கள். வியாபாரவர்க்கத்தினர் கையில் ஆட்சி முறை வந்ததும், தங்கள் வியாபாரங்களை எவ்வாறு விருத்திசெய்வது, தங்களுக்குப் போட்டியாய் இருக்கக்கூடியவற்றை எவ்வாறு அழிப்பது, என்று கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்து வந்து, இந்தியாவின் கப்பல் தொழில் பட்டுத்தொழில், முதலியவற்றை நசுக்கி வரத் தலைப்பட்டார்கள். பிறகு இந்தியாவில் கலகம் ஏற்பட்ட காரணத்தால் இந்தியாவின் நிர்வாகத்தை இங்கிலாந்து அரசரே நேரில் கைக்கொள்ளலானார்.

பலன் என்ன? ஒன்று பலவாயின.

அரசர் நேரில் கைக்கொண்டதும், இந்தியா மந்திரியென்றும் இராஜப்பிரதிநிதி யென்றும் மாகாணப் பிரதிநிதி யென்றும் பல நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டு, நிர்வாகம் நடந்துவரத் தலைப்பட்டதே யொழிய, ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியாருடைய வியாபாரக்குணம் இவர்களிடமும் மாறவில்லை. ஈஸ்டு இந்தியா கம்பெனியார் ஆளுகையில், தங்களுக்குச் சேரவேண்டிய வரி முதலியவகிதில் இங்கே செலவான தொகைபோக பாக்கிகளு இவ்விடத்தில் சரக்குகளாக வாங்கி ஏற்றிக்கொண்டு போயினர். ஆனால் இப்பொழுதோ, ஒரு கம்பெனிக்குப் பல கம்பெனிகளாகக் கிளம்பிவந்து இந்தியாவின் மூலப் பொருள்களை அள்ளிக்கொண்டு போகிறார்கள் இவற்றிற்க்கு கொடுக்க வேண்டிய தொகைக்காக, இந்தியா மந்திரி, உண்டியல்களை வெளியிட்டுப்பொருளுதவிசெய்துவருகிறார். உற்றுக்கவனிக்குங் காலத்தில் ஒன்று பலவாய், இந்தியாவின் பணம் சிதருண்டுபோகிறது. இந்தியாவின் நிர்வாகத்தில் பிரிட்டிஷ் அரசருக்குப் பேர்போன புதிய ஆட்சிமுறையில் வியாபாரியின் குணம் மாறவில்லையென்று ஏற்கனவே சொனனோ மல்லவா? அம்முறை நிர்வாகத்தார்கள் செய்துவரும், சட்டதிட்டங்களினின்றும், நன்கு புலப்படும்.

இங்கிலாந்தின் பழைய நிலை

இங்கிலாந்து வெகுகாலம் வரையில் தடைப்படுத்தப்பட்ட வியாபார முறையே கைக்கொண்டு வந்திருக்கிறது. அந்நிய நாட்

டிலிருந்து கோதுமை இறக்குமதி தாராளமாய்ச் செய்வதால் உள் நாட்டு விவசாயத்திற்குக்கஷ்டம் ஏற்பட்டதென் றெண்ணி, உள் நாட்டுபயிரிடுவோர்களைக்காப்பாற்றவே இறக்குமதிசெய்யப்பட்ட கோதுமைக்கும் வரிபோட்டு வந்தார்கள். இது போலவே இந்தியாவினின்றும் இறக்குமதியான துணி முதலியவற்றைத் தடுப்பதற்காக எவ்வளவோ சட்டதிட்டங்களை செய்து வந்திருக்கிறார்கள். என்ன பலன்? நாட்டில் இறக்குமதிக் குறைவால் பஞ்சம் ஏற்படவே ஜனங்கள் பெருங்கிளர்ச்சி செய்து இறக்குமதி வரியை எடுத்து விடவேண்டுமென நிர்ப்பந்தம் செய்த காரணத்தால் வரியை எடுத்து, எல்லா சாமான்களையும் தாராளமாய் நாட்டில் இறக்குமதி செய்யலாம் என்று சொன்னார்கள். பல தேசத்தினின்றும் தானியம்வரத் தலைபடவே, நாட்டில் பஞ்சம் நீங்கியது. கப்பல் வியாபாரத்தில் இவர்கள் அக்காலத்தில் முதன்மையாய் இருந்தபடியால் சௌகரியமும் உண்டாயிற்று. தங்களுக்குச் சௌகரியம் ஏற்பட்டதே என்ற எண்ணத்தால் உலகத்தாருக்கே அந்த புத்திமதியைச் சொல்ல ஆரம்பித்ததோடு இந்தியாவிலும் அம்முறையைக் கைகொள்ள ஆரம்பித்தார்கள். தங்கள் தொழில் அபிவிருத்திக்காக, தடைப்படுத்தப்பட்ட வியாபார முறையைக் கைக்கொண்டிருந்தோம் என்பதை இப்பொழுது மறந்துவிட்டார்கள்.

(82-ம் பக்கத் தொடர்ச்சி.)

ளெல்லாம் நமது பூர்வீக தாதைகள் அநுஷ்டித்து வந்ததோடு பிரபலமான டாக்டர்களும் வெளியிட்டுள்ளார்கள்.

தலைமயிர் வளருதற்கு தைலம் இந்திய முறை.

சுத்தமான தேங்காய் எண்ணெய் சேர் 1 குங்குமப்பூ விராகனிடை $\frac{1}{2}$ கஸ்தூரி மஞ்சள் தைலம் பலம் $\frac{1}{2}$ சேர்த்து வாசனை அத்தரில் வேண்டிய வாசனையை 5 6 துளி விட்டு உபயோகப்படுத்தி வர. மயிர் வளர்வதோடு, மூளையும் குளிர்ச்சியடையும். வேண்டுமானால் புட்டிகளில் பாக் செய்துக்கொள்ளவும்

குல்கந்து செய்யும் விதம்.

சுத்தமான புதுஜாடி அல்லது வாயகன்ற கண்ணாடி பாத்திரத்தில் ரோஜா மொக்குகளை வேண்டியமட்டும் போட்டு அது முழுதும்வரைக்கும் சீனிசர்க்கரை நிறையபரப்பி கொஞ்சம் ஜலம்விட்டு 20 நாள் ஊரவைத்து பிறகு எடுத்து உபயோகித்தால் கணச்சூடு முதலிய சகலவித உஷ்ணங்களும் தீர்ந்து கண் சிவந்து குளிரும்.

மகாத்மா காந்தியவர்கள் தமது கையெழுத்திற்கு ஒரு விலை ஏற்படுத்தியிருக்கின்றார். மகாத்மாவின் கையெழுத்தை எவரேனும் தங்கள் கையெழுத்துப் புத்தகத்தில் வேண்டுமென்று கேட்டால் அவர்கள் எப்பொழுதும் கதர் உடுத்துவதாக உறுதி கூற வேண்டுமாம்,

போனோ-பில்ம் என்ற பெயரால் பேசும் சினீமா படக்காட்சியைக் காட்டும சாதனம் சமீபத்திற் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதனால் சினீமா காட்சியில் படங்கள் அசைவதோடு அதற்கேற்றபடி பேச்சும் கேட்குமாம்: ஆனால் இச்சாதனம் விரைவில் சினீமா காக்ஷியைப்போல் உலகெங்கும் பரவுதற்கில்லை யென்றறிய வருத்த முறுகிறோம். ஏனெனில், நவீனமாகக்கண்டு பிடித்த இச்சாதனத்தின் முழு உரிமையையும் பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கக்ஷியார் தங்கள் கக்ஷியில் பிரசாரத்திற்கென விலை கொடுத்து வாங்கி விட்டனராம்.

இந்தியாவின் ஒரு கண்களெனத் திகழும் இரண்டு மகா புருஷர்களிருக்கின்றனர். இருவரும் வட இந்தியாவில் வசிக்கின்றனர். இருவரும் உலகசகோதரத்துவத்தை நிலைநிறுத்தப் பாடுபடுகின்றனர். இருவரும் உலகப் பிரசித்தியானவர்களே. தங்கள் உன்னத லக்ஷியத்தை உலகில் பரப்புவதற்காக ஒருவர் கலையை வளர்த்து வருகிறார். மற்றொருவர் கதரை வளர்த்து வருகிறார். அவர்களை முறையே மகா கவி ரவீந்திர நாத தாகூரென்றும், மகாத்மா மோகனதாஸ் கரம் சந்திர காந்தி என்றும் எடுத்துக் கூறவேண்டுமா?

மோட்டார் யமன்.

அமிருதசரஸ் டிபுடி கமிஷனராயிருந்த மிஸ்டர் வாக் அவர்கள் ரோடக் பிராந்தியத்துச் சார்ஜு வாங்கிக் கொள்ளும் பொருட்டுக் கடந்த 8-ந்தேதி லாஹூரிலிருந்து மோட்டார் வண்டியிற் புறப்பட்டார். மோட்டார் வண்டியானது பானிப்பட்டுக்கும் டெல்லிக்கும் மத்தியில் போய்க் கொண்டிருக்கையில் வண்டிக்கு ஏதோ விபத்து நேர, அது காரணமாக டெபுடி கம்மிஷனர் இறந்து போனார். உத்தியோகத்திற்காகச் சென்ற கனவான் விபத்திலாழ்ந்து விண்ணுலகஞ் சென்றார். இவ்விதம் நேருமென்று எவர்தான் மதித்தனர்? அப்பப்பா, எல்லாம் வல்ல இறைவனின் செயலை மானிடர் கண்களால் நிர்ணயிப்பது ஸ்ரத்தியமல்ல. எல்லாம் ஆண்டவன் கூத்தே! இந்து நேசன்

சாதி உட்சாதி விவாகம்.

மங்களூர் ஆரிய சமாஜ மந்திரத்தில் சென்றவராம் புதன் கிழமை யன்று ஒரு சாதிபுட் சாதி விவாகம் நடை பெற்றது. மாப்பிள்ளையின் பெயர் முத்துசாமி நாயுடு; மணமகளின் பெயர் ரத்னு பாய்; மாப்பிள்ளைக்கு 25-வயது. பெண்ணுக்கு 18-வயது பலிஜ வகுப்பு மாப்பிள்ளை; க்ஷத்திரிய வகுப்பு மணமகள். கலியாணத்திற்கு ஆங்குள்ள பல பிரமுகர்கள் வந்திருந்தார்களாம். நேசன்.

வரியை குரைக்கப்படாதா?

காலத்தறுவாயில் மழையின்மையால் குடியானவர்களுக்குப் பெருத்த நஷ்டமேற்பட்டிருக்கின்றன. வேளாளர் கஷ்டம் சொல்லிமுடியாத நிலையிலிருக்கின்றன. கவர்ன்மெண்டார் கருணை கூர்ந்து வரியைக்குறைக்க ஏற்பாடு செய்வார்களென நம்புகிறேன்.

மற்றுமோர் விவாகம்.

சேலத்தில் அய்யங்கார் பெண் ஓர் வைசிய செட்டியாரை சில நாளைக்குமுன் மணந்துகொண்டதாக ஸ்ரீமான் நாராயண ராவ் நமக்கு தெரிவிக்கிறார்.

இன்னும் மௌடீகமா?

தென்னற்காடு ஜில்லா ரிஷிவண்டியத்தில் ஓர் ரதம் புதிதாகச் செய்யப்படுகின்றது. அதில் நவீனமுறைக்கு ஏற்காத பலலீலை புடங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. என்ன காட்டு மிருண்டிகளின் கூற்று திருஷ்டி பரிகாரத்துக்காக? வேறு வழிகள் கிடையாதா? ஐயோ! இந்தியரே.

சட்ட சபை முடிவு தேர்தல்.

இந்த ஜில்லாவுக்காக ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் டில்லி சட்டசபைக்காவும். ஸ்ரீமான்கள் கே. சீத்தாராம ரெட்டியார் ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார் ராமச்சந்திர படையாச்சி என்பவர்கள். சென்னை சட்ட சபைக்காக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

ஓநாய்வளர்த்த இரண்டு குழந்தைகளைப்பற்றி மறுபத்திரிகையில்காண்க

ஜோதிடம்! ஜோதிடம்!!

உங்களுடைய எதிர்கால சம்பவங்களை தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படியானல் அடியில்கண்ட விலாசத்துக்கு ஐந்து ஆருட கேள்விகளை எழுதி கவருக்குள்வைத்து சீல்செய்து அனுப்புங்கள். மறு தபாலில் உங்கள் சீல் கவருடன் கவருக்குள் நீங்கள் எழுதிய கேள்விகளின் பதிலும் உங்களுக்குக் கிடைக்கும். ஆனல் களவு சட்டவிரோதமான கேள்விகளை எழுதக்கூடாது. பரீக்ஷை செய்யக்கூடிய கேள்விகளுக்கு பதில் எழுதப்படமாட்டாது. கவரின்மேல் நீங்கள் பிறந்த வரு, மீ; தேதி, நாழிகையாவது கேள்வி எழுதிய நேரமாவது கட்டாயம் எழுதவும்.

1 முதல் 5 கேள்விகளுக்கு ரூ. 1. (ஒன்று) 5-க்குமேல் பிரதிகேள்விக்கும் அணு 8. தசாபுக்தி அந்தரம் வாரியாக ஒருவருஷ பலன் எழுதியனுப்ப ரூ. 5 (ஐந்து). கோசாரபலன் 1 வருத்திற்கு அணு 10. வெளிநாடுகளுக்கு இரட்டிப்பு கட்டணம்.

நற்சாட்சிப் பத்திரங்கள்.

(1) கோயில்குண்டலா கர்னூல் 5—2—1923

அன்புள்ளஐயா, தாங்கள் எனக்கு 1923-ம் வருஷம் ஜனவரிமீ 17உ 1152 செ. கடிதத்தில் எழுதியனுப்பியபடியே நான் மரக்காபூரிலிருந்து கோயில்குண்டலாவுக்கு மாற்றப்பட்டேன்

(ஒப்பம்) சி. துரைசாமி நாயுடு,
போலீஸ் சர்கிள் இனிஸ்பெக்டர்.

(2) 396, செ, 3-வது மெத்தை, தங்கசாலைதெரு, சென்னை 9—6—23.

எனதருமை நண்பருக்கு, எனது தற்கால நிலமையைப்பற்றி தாங்கள் எழுதியது எல்லாம் சரியே. தவிர ஜூன்மீ முதல் 18உ வரையில் தாங்கள் சொல்லியபடியே நடக்கின்றன. பிற்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களை முற்கூறி அபாயங்களிலிருந்து ஜனங்களை தப்பும்படி தாங்கள் செய்வதை நான் ரொம்பவும மெச்சுகிறேன்

(ஒப்பம்) ஶ்ரீனிவாசபகவத்ஸ்வாமி

(3) ஜக்ஜிவன் தயால் பங்களா, காட்கோபார் 31—12—1922.

ஐயா, நான் எழுதியனுப்பின ஐந்து கேள்விகளுக்கும் சரியானபதில் அனுப்பியதற்கு ரொம்பவும் சந்தோஷம். தாங்கள் பதிலைப்பார்த்து ரொம்பவும் திருப்தியடைந்தேன்.

(ஒப்பம்) தனேசுவரவஜிராம்.

விலாசம்:-**T.S.கிருஷ்ணசாமி அய்யர், ஜோதிஷர்,**
விழுப்புரம் போஸ்டு, S. I. Ry.,